நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி.V.பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தேனி.
2026 ஆம் ஆண்டு மே மாதம் 19–ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண்.572/2026
**CNR NO.TNTH020010012026**
*****

திருமதி. சாந்தி ....மனுதாரர் /எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் ஆய்வாளர்,
மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையம்,
குற்ற எண்.13/2022,
(U/s. 417, 468, 471 மற்றும் 420 IPC)

....எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.திருமலை வெங்கடேசன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கிறஞர் நிலை–II அவர்கள் ஆஜராகினார்.

**உத்தரவு**

1) இவ்வழக்கில் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்த தொயைினைத் திரும்பப் பெற கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இவ்வழக்கின் எதிரி ஆவார் என்றும், மனுதாரர் மீது மேற்படி புகார்தாரரால் இதச பிரிவு 417, 468, 471 மற்றும் 420 ஆகிய பிரிவுகளில் குற்ற எண் 13/2022 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், மனுதாரர் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்ஜாமின் தாக்கல் செய்து அது கோப்புக்கு எடுக்கப்பட்டு CRL.O.P.(MD). No. 9525/2022 என 18.05.2022ம் தேதி ரூ.2,00,000/– டெபாசிட் செய்யும்படி உத்தரவிட்டு மனுதாரருக்கு முன்ஜாமின் வழங்கப்பட்டு, மனுதாரர் மேற்படி தொகையினை டொபசிட் செய்து பிணையில் வந்ததாகவும், மேற்படி வழக்கானது விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் குற்றமற்றவர் என விடுதலை செய்து 21.11.2025ம் தேதி தீர்ப்பு ஏற்பட்டது என்றும், மேற்படி மனுதாரரால் டெபாசிட் செய்யப்பட்ட

ரூ.2,00,000/- தொயகயை மனுதாரர் திரும்பப் பெறக் கோரியும், எதிர்காலத்தில் சமூகம் நீதிமன்றம் உத்தரவிடும் பட்சம் மேற்படி தொகை Redeposit செய்ய தயாராக இருக்கிறதாகவும், எதிர் மனுதாரர் தரப்பில் மேல்முறையீடு செய்தாலும் எதிரி கொள்ள தயாராக இருக்கிறதாகவும், மனுதாரர் டெபாசிட் செய்த மேற்படி தொகையை மனுதாரர் கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி கணக்கு ண்.1777055000094721, IFSC Code. KVBL0001777 என்கிற கணக்கிற்கு வரவு வைக்குமாறு மனுவில் கூறியுள்ளார்.

3) <u>அரசு மற்றும் எதிர் மனுதாரருக்கு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது பதில் பெறப்பட்டது</u>

இவ்வழக்கில் மனுதாரர்/எதிரிக்கு கடந்த 22.11.2025ம் தேதி இந்நீதிமன்றத்தில் பிரிவு 248(1) Cr.P.C. -ன் படி விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புகார்தாரர் அழகுராஜா என்பவர் இவ்வழக்ககை மேல்முறையீடு செய்ய CNR. No. TNTH010006742026, Filling No.CRLA/517/2026 பிரகாரம் கனம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமானது தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.</u>

(i) மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தமது வாதத்தில், மனுதாரர் முன்பிணை மனுவை மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL.O.P(MD) No.9525/2022-ல் மனு செய்து 18.05.2022 தேதியில் நிபந்தனையுடன் முன்பிணை வழங்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் ரூ.2,00,000/- தொகையை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும் என கூறப்பட்டதன் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் விசாரணை நடைப்பெற்று 21.11.2025 தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக விடுதலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புக்கு எதிராக அரசு தரப்பில் எவ்வித மேல்முறையீடு செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த தொகை ரூ.2,00,000/- மனுதாரருக்கு அவரது வங்கி கணக்கு மூலம் திரும்ப பெற வேண்டியது அவசியமாய் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட விடுதலை தீர்ப்புக்கு எதிராக வழக்கின் புகார்தாரர் அழகு ராஜா மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில்

மேல்முறையீடு தாக்கல் செய்து CNR. No. TNTH010006742026, Filling No. CRLA/517/2026 பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் சாந்தி வழக்கு புலன் விசாரணை சமயத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRL.O.P(MD) No.9525/2022 மனுவை முன்பிணை கோரி தாக்கல் செய்து, அந்த மனுவை அனுமதித்து 18.05.2022 தேதியில் உத்தரவிட்ட மாண்புமிகு உயர்நீதிமன்றம், மனுதாரர் ரூ.2,00,000/-த்தை குற்ற எண்.13/2022 எண்ணில் வைப்பீடு செய்ய வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ரூ.2,00,000/- குற்ற எண்.13/2022-ல் 31.05.2022 தேதியில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்பதையும் அறியமுடிகிறது. மனுதாரருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கு விடுதலை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், உயர்நீதிமன்ற உத்தரவின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரருக்கு திரும்ப ஒப்படைக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் மேற்படி ரூ.2,00,000/- த்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். மேலும், மேற்படி தொகையை குறித்து வழக்கு முடிவின் அடிப்படையில் எவ்வாறு தீர்மானிக்க வேண்டுமென மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் இந்நீதிமன்றத்திற்கு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படாத நிலையில் மேற்படி தொகை குறித்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

**இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து 2026 ஆம் ஆண்டு மே மாதம் 19-ம் நாள் செவ்வாய்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI
Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.05.19 18:18:32 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.